# Forum of BSNL Unions and Associations

## தமிழ் மாநிலம்

**தலைவர்:** R.பட்டாபிராமன் **கன்வீனர்:** S.செல்லப்பா

# இயக்க மாண்பினை காத்திட்ட பட்டினிப்போர்..

**அன்புமிக்க தோழர்களே,**

BSNL ஐ பாதுகாக்க இரண்டு நாள் வேலை நிறுத்தம் முழுமையான ஊழியர்களின் பங்களிப்புடன் பிரமாண்டமாக நடைபெற்றுள்ளது. அந்த வெற்றியை சீர்குலைக்கவேண்டும் என்ற நோக்கத்தோடு தலைமைப் பொது மேலாளர் அலுவலகத்தில் ஒருவர் கடும் பிரயத்தனம் செய்தார். ஆனால் ஊழியர்கள் வேலை நிறுத்தத்தில் பங்கேற்று அவரது முயற்சியை தோற்கடித்தனர். வேலை நிறுத்தத்தின் வெற்றியை பொறுத்துக்கொள்ள முடியாமல் தலைமை ஏற்று நடத்திய நமது மரியாதைக்குரிய Forum கன்வீனர் S.செல்லப்பா Forum தலைவர் R.பட்டாபிராமன், மனோஜ்குமார், D.C.சேகர் மற்றும் சார்லஸ் ஆகிய ஐந்து பேர் மீது காவல்துறையில் தன்னைத் தாக்கியதாக பொய்புகார் கொடுத்தார். இது தனிப்பட்ட தோழர்களின் மீதான தாக்குதல் அல்ல. போராட்ட குணம் வாய்ந்த இயக்கங்கள் மீது நடைபெற்ற தாக்குதல். மாநில நிர்வாகமோ சங்கங்களின் தலைவர்கள் கொடுத்த புகாரை கண்டு கொள்ளாமல் இருந்தது மட்டுமல்ல. சங்கங்களை அலட்சிய படுத்தும் வகையில் செயல்பட்டது.

எனவே இயக்க மாண்பினை காத்திட தமிழ் மாநில Forum பெருந்திரள் பட்டினிப்போரை 29.04.2015 அன்று நடத்தியது. சென்னை தவிர அருகாமை மாவட்டங்களான வேலூர், பாண்டி மற்றும் கடலூர் தோழர்களை கலந்து கொள்ள அறைகூவல் விடுத்தது. இந்த மூன்று மாவட்டங்களை சேர்ந்த தோழர்களை தவிர செய்தி கேட்டு தஞ்சை, குடந்தை, கோவை, நீலகிரி, தருமபுரி உள்ளிட்ட தமிழகம் முழுவதிலுமிருந்து பல தோழர்கள் இந்த பட்டினிப்போரில் தங்களை இணைத்துக்கொண்டனர்.

600க்கும் மேற்பட்ட தோழர்கள் கலந்து கொண்ட இந்த பிரமாண்டமான பட்டினிப்போரில் தங்களையும் இணைத்துக் கொண்டு வாழ்த்துரை வழங்கிய தொழிற்சங்க தலைவர்கள் தோழர் RK, தோழர் முத்தியாலு, அகில இந்திய நிர்வாகிகள் தோழர் S.S.கோபாலகிருஷ்ணன், தோழர் ஜெயராமன், தோழர் காமராஜ், ஒப்பந்த ஊழியர் சங்க மாநிலச் செயலர் தோழர் C.வினோத்குமார் மற்றும் மாநில மாவட்ட சங்க நிர்வாகிகளையும் தமிழ் மாநில Forum நன்றியுடன் பாராட்டுகிறது.

அலட்சியமாக இருந்த மாநில நிர்வாகம் தோழர்களின் எழுச்சியை கண்டு உடனடியாக பேச்சுவார்த்தை நடத்தியது. தலைமைப் பொது மேலாளர், முதன்மைப் பொது மேலாளர் (நிதி), பொது மேலாளர்கள் மற்றும் துணைப் பொது மேலாளர் (நிர்வாகம்) நமது தலைவர்களுடன் நடத்திய பேச்சுவார்த்தையில் ஊழியர்களின் உணர்வுகளை உணர்ந்து உரிய நடவடிக்கைகளில் இறங்கியுள்ளது.

**ஒன்றுபட்ட போராட்டம் நிச்சயம் வெல்லும் என்பதை எடுத்துக்காட்டும் வகையில் நடைபெற்ற போராட்டத்தில் கலந்து கொண்ட அனைவருக்கும் தமிழகம் முழுவதும் தங்கள் எண்ணம் முழுவதையும் போராட்ட களத்தில் வைத்திருந்த தோழர்களுக்கும் தமிழ் மாநில Forum வாழ்த்துக்களை தெரிவித்திக்கொள்கிறது.**

தோழமையுடன்

| | | |
|---|---|---|
| R.பட்டாபிராமன் | S. செல்லப்பா | A.பாபு ராதாகிருஷ்ணன் |
| President Forum & CS NFTE | Convener, Forum | CS, BSNLEU |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| M.Gopinathan | S.Sivakumar. | K.Rajasekaran | P.Alagupandiyaraja | T.Senthilkumar | R.Chandrasekar |
| CS,SNEA(I) | CS,AIBSNLEA | CS, AIBSNLOA | CS, SNATTA | CS, TSOA | Dy. CS, SEWABSNL |